# தேவிபாரதியின் 'வீடென்ப' சிறுகதையில் ஓடாதகாலமும் அழியாத ஆசையும்

**சா.பிரியதரிசினி**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
அறச்சலூர், ஈரோடு.

நெறியாளர்:
**முனைவர். பொ.இராதாஜெயலட்சுமி,**
நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
அறச்சலூர், ஈரோடு.

**ஆய்வுச்சுருக்கம்:**

இலக்கியம் மனிதவாழ்வில் நிகழும் சில அற்பமான காட்சியைக்கூட தன் நுட்பமான விவரிப்பில் மானுடத்தின் மனிருக்கத்தை காட்சிப்படுத்துகிறது. அந்தவகையில் சிறுகதையில் சிறையினுள்ளிருக்கும் சின்னுவின் வாழ்வையும் வெளியிலிருக்கும் மகேஸ்வரியின் ஏக்கங்களையும் மாறிமாறி உருப்பெற்று காலத்தின் பிடியில் இச்சையின் தவிப்பு மட்டும் நீட்டிப்பதை வெளிப்படையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதில் இருவரின் வாழ்விழும் நிகழும் நிகழ்வுகளுடன் கற்பனை காட்சிகள் சித்தரிக்கப்பட்டு சந்தேகம் தோற்றம் கொள்கிறது என்பதை காலத்தின் பிடியில் சிக்கிக்கொண்ட ஆசைகளின் நிலைபாட்டை இக்கட்டுரையின் வழி அறியலாம்.

**முன்னுரை:**

மனிதனின் வாழ்க்கையை மிக அருகில் இருந்து தரிசிக்கத் துணைபுரிபவை இலக்கியமை. ஏனெனில் அற்பமானதொரு காட்சியைக் கூட இலக்கியம் நுட்பமான விவரிப்பால் மானுடத்தின் வாழ்க்கையை அருகில் நின்று தரிசிக்கும் வகையில் நின்று தரிசிக்கும் வகையில் சிறந்த படைப்பாக மாற்றியமைக்கிறது. இச்சையின் துடிப்பைப் பற்றி பல பரிமாணங்களில் தமிழ் இலக்கியம் கையாளப்பட்டிருந்தாலும் தேவிபாரதியின் கதைக்கட்டமைப்பை வாசிக்கும் போது மனதின் ஆழத்தில் இச்சையின்பால் நம்மை எவ்வாறு இழுத்துச் செல்கிறது என்பதை இக்கட்டுரையின் வழி அறியலாம்.

**சிறுகதை இலக்கியம்:**

மனிதவாழ்க்கையின் வெளிப்பாடே இலக்கியம் எனலாம். ஏனெனில் இலக்கியம் மனிதனின் எண்ணம், செயல்களை மையமாகக் கொண்டு படைக்கப்படுகிறது. இன்றைய உலகம் ஒரு மணிக்கு 25,000 மைல் வேகத்தில் சுழல்கிறது. அதனோடு ஒட்டிய ஓட்டமும் நடையுமாக நிற்கவும் காலமில்லாது நினைக்கவும் நேரமின்றிப் பம்பரமாகச் சுழல்கின்றான் மனிதன். இன்றைய இயந்திரமான சூழலில் கதைகளை வாசிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. எனவேதான் குறுகிய காலத்தில் படித்து முடிக்கக் கூடிய சிறுகதையின் மீது மக்களுக்கு ஆர்வம் ஏற்படுகிறது. இத்தகைய சூழல் தன்மையானது சிறுகதை இலக்கியம் மேலும் வளர்ச்சி அடைவதற்கு உந்துசக்தியாக அமைகிறது.

**உளவியல்:**

உளவியல் என்பது மனிதனின் நடத்தைச் செயல்பாடுகளை உற்றுநோக்கி ஆராய்வதாகும். கி.பி.19-ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து தான் உளவியல் தனிஒரு துறையாக வளர்ந்துவந்துள்ளது. இவ்வுளவியல் உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனையும் மானுடம் என்ற பொதுப்பணியில் அடக்கமுறப்படுகிறது. ஆதலால் தான் மனிதமனச் செயல்பாடுகளின் விளைவில் ஒருவனின் நடத்தைகளையும், நடத்தை மாறுபாடுகளையும் விளக்கும் அறிவியலே உளவியல் என்கின்றனர்.

சான்றாக,

**"மனித உள்ளம், உள்ளத்தை தன்னகத்தே கொண்ட உடல்,**
**அவ்வுடல் தோன்றும் உணர்வுகள், அவ்வுணர்ச்சிகளின்**
**வெளிப்பாடாக அல்லது வடிகாலாகத் திகழும் நடத்தை**
**ஆகியவற்றை உள்ளடக்கியது உளவியல்"** 1

என சாரதாம்பாள் கூறியது குறிப்பிடத்தக்கது. இதில் மனிதனின் உடல், உள்ளம், உணர்வு, பிறரிடம் நடந்து கொள்ளும் விதம், நடத்தைப்பண்பு, உள்ளத்தின் நிலை, சூழல் போன்றவை மனிதனின் நடத்தைப் பண்புகளை ஆய்வதே உளவியல் பொருள் கொள்ளப்படுகிறது.

**சின்னுவின் சிறைவாழ்க்கை:**

ஒரு மனிதனை நல்லவனாகவும், தீயவனாகவும் மாற்றி அமைப்பதில் காலத்திற்கு முக்கியப்பங்குள்ளது. இயல்பாகவே ஒருவருடைய வாழ்வில் அடுத்த நிமிடம் அல்லது நொடி என்ன நடக்குமோ என்பதை எவராலும் உறுதிபடக்கூறவியலாது.

வீடென்ப சிறுகதையில் சின்னு விதிவசத்தால் சிறைசெல்ல நேரிடுகிறது. ஒருவருடைய வாழ்வில் சிறைதண்டனை ஒருவருக்கு கொடுக்கக் கூடிய கடுமையான தண்டனையாகும். ஏனெனில் ஒருவருடைய இளமைக்காலம், ஆசைகள், கனவுகள், காதல், காமம் என்பன பலவும் வாழ்வில் வெறுமையையே ஏற்படுத்திவிடுகிறது.

சான்றாக,

**"குற்றங்கலற்ற பால்யத்தையும் களிப்பின் ஆழங்களில் மூழ்கித் திளைத்திருந்த வாலிபத்தையும் இனி அவனால் நினைவுகூர முடியாது. "** 2

என்ற வரிகள் சின்னுவின் சிறைவாழ்க்கையோ அவனுக்கு ஒரு மனநோயை உருவாக்கிவிட்டது. சின்னுவின் பதிநான்கு ஆண்டுகால சிறைவாழ்க்கையின் தண்டனையானது தனிமை, இச்சை, காமம், கைதிகளின் கொடிய வாடை, மட்கிய உடல்களின் துர்நாற்றம், இடத்தின் சூழல் என கனவிலும் மீளமுடியாத படி ஒவ்வொருநாறளும் தவிக்கின்றது.

இதனை வில்லியம் ஜேம்ஸ் கூறுகையில்,

**"கடவுள் நம் குற்றங்களை மன்னிக்கலாம், ஆனால்**
**நரம்பு மண்டல்ம் அவ்வாறு மன்னிப்பதில்லை"**3

எனக் குறிப்பிருகிறார். மேலும் சிசரோ,

**"உடல்நோயை விட மனநோய்தான் மனிதனை**
**அதிகம் அழிக்கும் தன்மை வாய்ந்தது."**4

என்ற கருத்து ஒப்புநோக்கும் வகையில் அமைந்துள்ளது. சின்னுவின் மனமானது தான்செய்த சிறுதவறு ஆனது தனது வாழ்க்கைச் சூழலையே மாற்றிவிட்டதே எனக் கலங்கினான். அதோடு இல்லாமல் தன்னைக் கணவனாகக் கொண்ட ஒரே காரணத்திற்காக தனது மனைவி மகேஸ்வரியின் ஆசைகள், கனவுகள், இச்சை, ஏக்கம், பொருளாதார பிரச்சனை, நடைமுறை வாழ்வில் போராட்டமே வாழ்க்கையாக மாறிவிட்டதே எண்ணி எண்ணி ஒரு மனநோய் கொண்டவன் போல் புலம்பித்தவிக்கிறான் சின்னு.

இவற்றோடு நின்று விடாமல் சிறைக்கைதியாக இருக்கும் போதே பலதொழில்களையும் கற்றுக்கொள்கிறான். சின்னு துப்புறவாளனாகவும், தச்சனாகவும், கட்டடப் பணியாளனாவும், நெசவுத் தொழிலாளியாகவும், விவசாயியாகவும், சமையல் காரனாகவும் பல்வேறு வேலைகளைப் பார்த்தான். பிறகு வார்டனாக நியமிக்கப்பட்டான். விடுதலை அடையும் காலங்களை எண்ணிக்கொண்டும் தான் செய்த வேலைகளுக்காகத் தன் கணக்கில் சேர்ந்திருக்கும் தொகை குறித்து ஓயாமல் மனக்கணக்கு போட்டு அதிக நேரத்தை செலவிடத் தொடங்கினான்.

**மகேஸ்வரியின் தனிமைநிலை:**

மகேஸ்வரி மாதம் தவறாமல் சிறையில் உள்ள தன்கணவனை பார்த்து கொள்வது வழக்கம். அவளது உடலில் நிகழும் மாற்றங்களை அவன் கம்பிக்கு அப்பாலிருந்தும் துல்லியமாக கண்காணித்து வந்தான். சில தருணங்களில் அவள் துவண்டுபோனவளாகத் தென்படுவாள், இளைத்திருப்பாள், கண்கள் குழிவிழுந்தும் மேனிகருத்தும் சில தருணங்களில் வெகுநேரம் அழுது கொண்டிருப்பாள். இவற்றை எல்லாம் உணர்ந்து சீனு கேட்டால் பெருமூச்சு ஒன்று மட்டுமே பதிலாக அமையும். மகேஸ்வரியின் மனமானது,

> **"தெளிவற்றதும் கலக்கம் நிரம்பியதுமான குரலில்**
> **அவன் விடுதலையாவதற்கு இன்னும் எத்தனை**
> **வருடங்கள் எஞ்சியிருக்கின்றன எனக் கேட்டாள்.**
> **விடைபெறும் ஒவ்வொரு தருணத்திலும் தவறாமல்**
> **அவளிடமிருந்து வரும் இந்தக் கேள்வியை அவனால்**
> **ஒருபோதும் பதற்றமின்றி எதிர்கொள்ள முடியவில்லை.**
> **தன்னால் பதிலளிக்க முடியாத, புரிந்துகொள்ளவே முடியாத**
> **அந்தக் கேள்வியைப் பற்றி அவன் தீவிரமாக**
> **யோசித்துக்கொண்டிருக்கும் போது அவள் வெளியேற்றப்பட்டிருப்பாள் " 5**

இங்கு அவளின் ஏக்கத்திற்கும் கேள்விக்கும் ஒருபோதும் விடைகிடைக்கவில்லை. சில வருடங்கள் சென்ற பின்பு ஒருநாள் விடுதலை கிடைக்கும் நாளை மகேஸ்வரிக்கு கூறினான் சின்னு அதற்கு சிறுபுன்னகை காட்டிவிட்டு சென்று விட்டாள். விடுதலை பெறும் அன்று அவள் வருவாளா என்ற ஏக்கத்திற்கு பதில் அளிப்பதுபோல் அவன் முன்பு வந்து நின்றாள்.

சான்றாக,

> **"கண்ணீர் ஒன்றே கவலையைத் தீர்க்கும்,**
> **கவலை முடிவில் அனுபவம் சேர்க்கும்"**6

என்ற கண்ணதாசனின் வரிகள் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இங்கு மனமானது துன்பப்படும் காலங்களில் இன்பமான தருணங்களை மனத்தில் கொண்டு வாழும் பொழுது துன்பம் கூட இன்பமாக மாறிவிடும் என்பதை உணர்ந்து வாழப்பழகின்கொள்ள வழிகாட்டுகிறது.

**இருவரின் மனநிலை:**

திருமணமான சில நாட்களிலேயே இருவரும் பிரிந்து வாழும் சூழல் அமைந்துவிட்டது. இதில் இச்சை மட்டும் தொடர்ந்து கொண்டு வருகிறது. கொடிய கணவினால் மீள முடியாதபடி இன்னும் திணறுகிறது மனம் மட்டும். இது ஒளிக்கும் இருவருக்கும் அப்பாலில் காலத்தின் வெளியைக் கொண்டு பரிசீலனைக் குட்படுத்தி தொடர்வதை உணரமுடிகிறது.

**முடிவுரை:**

இருவரின் மனமும் இளமையின் பிடியில் சிக்கிக்கொண்டு தவிக்கிறது. காலத்தின் பிடியில் சிக்கிய இவ்இச்சையை மீட்டுக்கொண்டுவர முடியாது. அது எப்பொழுதும் மனத்தினுள் ஒருவித சலனம் போன்று வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கொண்டுதான் வரும் என்பதை இக்கதை உணர்த்துகிறது. இதில் உணர்ச்சிவசப்பட்டு ஒரு நொடியில் செய்த சிறுதவறு ஒருவனை வாழ்நாள் முழுவதும் ஏக்கங்களையும் ஆசைகளையும் சுமந்துகொண்டு வாழ வைத்துள்ளதை இக்கட்டுரை வழி அறியமுடிந்தது.

**சான்றாதாரங்கள்:**

1. செ.சாரதாம்பாள் - இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் ப-2
நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ்(பி) லிட்..
முதல் பதிப்பு : ஜூலை,2017
2. தேவிபாரதி - வீடென்ப காலச்சுவடு பதிப்பகம்
முதல் பதிப்பு. டிசம்பர் 2013 ப-194
3. டாக்டர். செ.சோமசுந்தரம் ,
டாக்டர். தி.ஜெயராமகிருஷ்ணன்
மனநோயும் இன்றைய மருத்துவமும் ப-116
4. மேலது - ,, ப-49
5. தேவிபாரதி - வீடென்ப காலச்சுவடு பதிப்பகம்
முதல் பதிப்பு. டிசம்பர் 2013 ப-180
6. மது.ச. விமலானந்தம் -தமிழ் இலக்கிய வரலாறு ப-232